මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka


මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

ஊடக அறிவித்தல் இல: LAE/2025/40 2025.04.04

# உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06

## 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான கட்டளைக்கமைய 2025 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்கான ஆகக்கூடிய செலவின எல்லை அன்றேல் அதிகாரமளிக்கப்பட்ட தொகை

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) ஏற்பாடுகளுக்கமைய எழுத்திலான ஒரு சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபைக்கும் (எல்பிட்டிய பிரதேச சபை, கல்முனை மாநகர சபை தவிர்ந்த) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 2025.05.06 ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் போட்டியிடப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒவ்வொன்றுக்கும், சுயேச்சைக் குழு ஒவ்வொன்றுக்கும், வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 3 ஆம் பிரிவிற்கிணங்க, ஒவ்வோர் உள்ளூர் அதிகார சபையின் ஒவ்வொரு வாக்கெடுப்பு மாவட்டத்தின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிடக்கூடிய ஆகக்கூடிய செலவின எல்லை அன்றேல் அதிகாரமளிக்கப்பட்ட தொகை பற்றிய தகவல்களை கீழே காணலாம்:-

1. மேற்குறித்த வாக்கெடுப்பின் போது போட்டியிடுகின்ற அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளையும் சுயேச்சைக் குழுக்களையும் உசாவி விஞ்ஞான ரீதியான கணிப்பீட்டு முறையொன்றை அனுசரித்து தேர்தல் ஆணைக்குழுவினல் இந்த ஆகக்கூடிய செலவின எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
2. அதற்கமைய 339 உள்ளூர் அதிகார சபைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்ட தொகையை நிர்ணயிக்கும் போது கணிப்பிடப்பட்ட கணிப்பீடு செய்யும் நோக்கத்திற்காக தேருநரொருவருக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.74.00 முதல் ரூ.160.00 வரையான வீச்சில் காணப்படும்.

| கட்சி/குழு/வேட்பாளர் | (I) கணிப்பிடப்படுகின்ற தொகையில் உரித்தாகின்ற சதவீதம் | (II) அதிகாரமளிக்கப்பட்ட தொகையைக் கணிப்பிடுதல் |
|---|---|---|
| முதலாவது (I) பெயர்குறித்த நியமனப் பத்திரத்திலுள்ள வேட்பாளரொருவருக்கு | உள்ளூர் அதிகார சபைக்காக கணிப்பிடப்பட்ட, கணிப்பீடு செய்யும் நோக்கத்திற்கான தொகையில் 50% சதவீத அளவு | (I) நிரலில் குறிப்பிடப்படும் தொகையை போட்டியிடப்படுகின்ற மாவட்டத்திற்குரிய செல்லுபடியான தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட தேருநர்களின் எண்ணிக்கையினால் பெருக்குவதன் மூலம் |
| மேலதிக (II) பெயர்குறித்த நியமனப் பத்திரத்திலுள்ள வேட்பாளரொருவருக்கு | உள்ளூர் அதிகார சபைக்காக கணிப்பிடப்பட்ட, கணிப்பீடு செய்யும் நோக்கத்திற்கான தொகையில் 20% சதவீத அளவு | நிரல் (I) இல் குறிப்பிடப்படுகின்ற தொகையை போட்டியிடப்படுகின்ற உள்ளூர் அதிகார சபை அதிகார இடப்பரப்பிற்கு செல்லுபடியான தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட தேருநர்களின் எண்ணிக்கையினால் பெருக்குவதன் மூலம் விளைகின்ற எண்ணிக்கையை நிரல் II இலுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கையினால் வகுப்பதன் மூலம் |
| அரசியல் கட்சியொன்றுக்கு அல்லது சுயேச்சைக் குழுவொன்றுக்கு | உள்ளூர் அதிகார சபைக்காக கணிப்பிடப்பட்ட, கணிப்பீடு செய்யும் நோக்கத்திற்கான தொகையில் 30% சதவீத அளவு | நிரல் (I) இல் குறிப்பிடப்படுகின்ற தொகையை போட்டியிடப்படுகின்ற உள்ளூர் அதிகார சபை அதிகார இடப்பரப்பிற்கு செல்லுபடியான தேருநர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்ட தேருநர்களின் எண்ணிக்கையினால் பெருக்குவதன் மூலம் |

அதற்கமைய 2025 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் போட்டியிடப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒவ்வொன்றுக்கும், சுயேச்சைக் குழு ஒவ்வொன்றுக்கும், வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின் 3 ஆம் பிரிவிற்கிணங்க கணிப்பிடப்பட்ட ஆகக்கூடிய செலவின எல்லைகள், 2025.03.23 ஆம் திகதிய, 2428/72 ஆம் இலக்க, 2025.03.28 ஆம் திகதிய 2429/47 ஆம் இலக்க வர்த்தமானிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்